தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG30** - நிலை 3 - **(Grade 3)**

நேரடி எழுத்துத் தேர்வு (Offline Examination)

மே, சூன் – 2017

நேரம் : 2.30 மணி                                        மதிப்பெண் : 75

பிரிவு - 1

**I** **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
2. திருக்குறள் எந்தப் பாவில் இயற்றப்பட்டுள்ளது?
3. மன்னுதல் என்பதன் பொருள் யாது?
4. பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்வதால் வருவது யாது?
5. சோழநாட்டின் தலைநகர் எது?
6. நித்திலம் என்பது என்ன?
7. தெற்கில் இருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
8. மாங்கனி என்னும் நூலை எழுதியவர் யார்?
9. பாக்கள் எத்தனை வகைப்படும்?
10. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?

பிரிவு - 2

**II** **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. அறங்களில் தலையாய அறங்களாக இரண்டினைக் கூறுக. (கொல்லாமை, பொய்யாமை என்னும் இரண்டும் தலையாய அறங்களாகும்.)
2. ஐம்பூதங்கள் கடவுளை எவ்வாறு வணங்குகின்றன?
3. உலகத்தில் நிலைபெற்றிருக்கச் செய்யவேண்டுவது யாது?
4. சிறுபஞ்சமூலம் கூறும் கருத்துகள் யாவை?
5. ஐஞ்சிறு காப்பியங்கள் யாவை?
6. முக்கூடலில் சேரும் மூன்று ஆறுகள் யாவை?
7. கதிரவனை ஏன் போற்ற வேண்டும்?
8. வாணிகம் செய்வார்க்குச் சிறந்த வாணிகம் எது?
9. காவிரி ஆறு தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகிறது?
10. நடுகல் என்பது என்ன?
11. வான ஊர்திகளின் வகைகள் யாவை?
12. நெய்தல் நிலத்திற்குரிய நிலம் யாது?

13. பாடாண் திணை என்றால் என்ன?
14. மாத்திரை என்றால் என்ன?
15. அகப்பொருள் என்றால் என்ன?

## பிரிவு - 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. மொழி வாழ்த்தில் தமிழ்மொழியின் சிறப்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
2. 'கள்ளி வயிற்றில்' எனத் தொடங்கும் நான்மணிக்கடிகைப் பாடலின் கருத்தைக் கூறுக.
3. எந்தெந்த பொருள்களை மகளிர் ஏந்தி கண்ணகியை மங்கல அமளியாகிய படுக்கையில் ஏற்றினர்?
4. கலம்பகத்தின் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
5. காவிரியின் சிறப்பினை இளங்கோவடிகள் எவ்வாறு புனைந்துரைத்துள்ளார்?
6. திணை என்றால் என்ன? அவை யாவை?
7. பகுபத உறுப்புகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.
8. வஞ்சப் புகழ்ச்சி அணி எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

## பிரிவு - 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. கோவலன் – கண்ணகி திருமண நிகழ்ச்சியை இளங்கோவடிகள் எவ்வாறு காட்டியுள்ளார்?
2. திருமணமான பின்பு மணி காட்டிற்குச் சென்று முனிவரைச் சந்தித்து உரையாடிய நிகழ்ச்சியைப் பற்றி எழுதுக.
3. வேற்றுமை உருபுகள் எத்தனை வகைப்படும்? அவையாவை?

## பிரிவு - 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. செந்தமிழ்க் காஞ்சியில் பாவாணர் தமிழையும், தமிழ்நாட்டினையும் எவ்வாறு விவரித்துள்ளார்?
2. புறப்பொருள் திணைகள் எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

□□□□